**தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

விடுநர்
டாக்டர்.மா.ஆர்த்தி இ.ஆ.ப.,
மாநிலத் திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
சென்னை–600006.

பெறுநர்
முதன்மைக்கல்விஅலுவலர்கள்,
அனைத்து மாவட்டங்கள்.

ந.க.எண்: ACE/159/கலை/ஒபக/2023., நாள்: 23.08.2023

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி கலைப் பண்பாட்டுத் திருவிழா (KALA UTSAV) 2023–24 – பள்ளி, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் போட்டிகள் நடத்துதல் – வழிகாட்டுதல்கள் வழங்குதல்–சார்ந்து.

பார்வை: 1.2023–24ஆம் கல்வியாண்டிற்கான மத்திய கல்வி அமைச்சகத்தின் திட்ட ஏற்பளிப்புக்குழு கூட்ட நடவடிக்கை பரிந்துரைகள், நாள்: 23.02.2023.

2. மத்திய கல்வி அமைச்சகத்திடமிருந்து கலைப் பண்பாட்டுத் திருவிழா போட்டிகள் (KALA UTSAV) நடத்துதல் சார்ந்து மின்னஞ்சல் வாயிலாக பெறப்பட்ட வழிகாட்டுதல்கள்.

**************

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வாயிலாக அனைத்து வகை பள்ளிகளில் இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் (IX–XII) பயிலும் மாணவர்களது படைப்பாற்றலை வளர்க்கவும், நமது பாரம்பரிய கலைகளை உயிர்ப்புடன் வைத்திருக்கவும், வாய்பாட்டிசை, கருவியிசை, நடனம், காட்சிக் கலை (Vocal music, Instrumental music, Dance, Visual Arts) மற்றும் தனி நடிப்பு எனும் ஐந்து பெருந்தலைப்புகளில் கலைப் பண்பாட்டுத் திருவிழா போட்டிகள் (KALA UTSAV) 2015–16ஆம் கல்வியாண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. பார்வை–1ன்படி இந்தக் கல்வியாண்டிலும் (2023–24) இப்போட்டிகளை பள்ளி, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடத்திட அனுமதிக்கப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

www.Padasalai.Net

**கலை வடிவங்கள்–2023–24**

2023–24ம் ஆண்டுக்கு கலைப்பண்பாட்டுத் திருவிழா போட்டிகள் அனைத்து (அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார்) பள்ளிகளில் நடத்திட தேவையான வழிகாட்டு நெறிமுறைகள் மத்திய கல்வி அமைச்சகத்திடமிருந்து பெறப்பட்டு பின்வருமாறு வழங்கப்படுகிறது. இப்போட்டிகள்யாவும் கீழ்காணும் 10 கலை வடிவங்ககளில் மாணவ மற்றும் மாணவிகளுக்கென தனித்தனியே நடத்திடல் வேண்டும்.

| வ.எண் | கலை வடிவங்கள் |
|---|---|
| 1. | வாய்ப்பாட்டு இசை – செவ்வியல் (Vocal Music – Classical) |
| 2. | வாய்ப்பாட்டிசை பாரம்பரிய நாட்டுப்புற வகை (Vocal Music – Traditional Folk) |
| 3. | கருவி இசை – தாள வாத்தியம் (Instrumental Music – Percussive) |
| 4. | கருவி இசை மெல்லிசை (Instrumental Music – Melodic) |
| 5. | நடனம் – செவ்வியல் (Dance – Classical) |
| 6. | நடனம் – பாரம்பரிய நாட்டுப்புற வகை (Dance – Folk) |
| 7. | காட்சிக் கலை (இருபரிமாணம்) (Visual Arts (2–dimensional)) |
| 8. | காட்சிக் கலை ( மூன்று பரிமாணம்) ( Visual Arts (3–dimensional)) |
| 9. | உள்ளூர் தொன்மை பொம்மைகள் – விளையாட்டுகள் (Indigenous Toys and Games) |
| 10. | நாடகம் (தனி நபர் நடிப்பு) ( Drama (Solo Acting)) |

**போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகுதிகள்:**

- அனைத்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் IX, X, XI மற்றும் XII வகுப்பு மாணவ மற்றும் மாணவிகள் பங்கேற்கலாம்.
- தமிழகத்தில் உள்ள பிற மத்திய அரசு அமைப்புகள்/உள்ளாட்சி அமைப்புகளின் தனியார் பள்ளிகள் மற்றும் பிற பள்ளிகளும் (மத்திய திபெத்திய பள்ளி நிர்வாகம், NCERT, ரயில்வே, BSF, CRPF, ராணுவம், விமானப்படை, கண்டோன்மென்ட் வாரியங்கள், NDMC, KGBV, ஏக்லவ்யா பள்ளிகள், பல்நோக்கு பள்ளிகள் (DMS) போன்றவை)

www.Padasalai.Net

இணைந்து மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்கலாம். மேற்கூறப்பட்ட அனைத்து பள்ளிகளும் மாவட்ட மற்றும் மாநில அளவில் பங்கேற்பதை உறுதி செய்தல் வேண்டும்.

- KVS மற்றும் NVS ஆகியவை KVS மற்றும் NVS ஆகியவற்றுக்கு இடையே போட்டிகளை நடத்திட வேண்டும். அதில் வெற்றி பெறும் அணிகள் தேசிய அளவில் இரண்டு தனித்தனி அணிகளாக பங்கேற்கும்.
- **கலைப்பண்பாட்டுத் திருவிழாவின்** முந்தைய ஆண்டுகளில் வெற்றி பெற்றவர்கள் (1வது, 2வது மற்றும் 3வது இடம்) இவ்வாண்டு நடைபெறும் கலை பண்பாட்டு திருவிழா போட்டிகளில் (2023-24) பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- பள்ளி ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் போட்டிகளுக்கு தயாராகும் மாணவர்-கலைஞர்கள் மட்டுமே இப்போட்டிகளில் பங்கேற்க முடியும்..
- தொழில்முறை கலைஞர்கள்/ நடிகர்களின் பங்கேற்பு அனுமதிக்கப்பட மாட்டாது.
- ஒரு மாணவர் ஒரு கலைப் பிரிவில் மட்டுமே பங்கேற்க முடியும்.
- அனைத்து வகை சிறப்புத் தேவையுடைய மாணவர்களையும்(CWSN) ஊக்கபடுத்தி ஆர்வமுடன் பங்கேற்பதை ஊக்குவித்தல் வேண்டும்.

- எனவே, ஒவ்வொரு மாநிலமும் 10 கலை வடிவங்களில் 10 ஆண் மற்றும் 10 பெண் பங்கேற்பாளர்களை உள்ளடக்கிய மொத்தம் 20 பதிவுகளை சமர்ப்பிக்க கோரப்பட்டுள்ளது. எனவே, மாவட்ட அளவில் அவ்வாறே 10 கலை வடிவங்களில் 10 ஆண் மற்றும் 10 பெண் பங்கேற்பாளர்களை உள்ளடக்கிய மொத்தம் 20 வெற்றியாளர்களை தெரிவு செய்தல் வேண்டும். அவ்வாறே மாநில அளவிலான போட்டிகளிலும் தெரிவு செய்து தேசிய அளவில் பங்கேற்க செய்தல் வேண்டும்
- போட்டிகள் நடத்துதல் சார்ந்து பிற வழிகாட்டுதல்கள் இணைப்பு-IIல் இணைக்கப்பட்டுள்ளது.
- **<u>தேசிய அளவிலான கலை பண்பாட்டு திருவிழா -2023-24</u>**

**தேசிய அளவிலான கலை பண்பாட்டு திருவிழா (2023-24) நேருக்கு நேர் முறையில் நடத்தப்படும் என பார்வை-2ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு பிரிவுகளில் நடைபெறும் போட்டிகளின்**

www.Padasalai.Net

இடம் மற்றும் அட்டவணை (இறுதிப்படுத்தப்பட்டதும்) அனைத்து அனைத்து மாநிலங்களுக்கும் பின்னர் தெரிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பள்ளி, மாவட்ட மற்றும் மாநில அளவிளான போட்டிகள் மட்டும் கீழ்காணும் அட்டவனைப்படி நடத்திடல் வேண்டும்.

| **வ.எண்** | **செயல்பாடு** | **காலவரம்பு** |
|---|---|---|
| 1. | பள்ளி / மாவட்ட அளவில் | 28.08.2023 முதல் 25.09.2023 வரை |
| 2. | மாவட்ட அளவில் தேர்வு செய்யப்படும் மாணவர்களின் விவரம் மாநில திட்ட இயக்கத்தில் சமர்பித்தல் | 28.09.2023 க்குள் |
| 3. | மாநில அளவிலான போட்டிகள் | 10.10.2023 முதல் 13.10.2023 வரை |

www.Padasalai.Net

**<u>விருதுகள்</u>**

தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் மாணவ மாணவிகளுக்கு (1வது, 2வது மற்றும் 3வது) **ரொக்கப் பரிசு***, **கோப்பை** மற்றும் **பதக்கம்** வழங்கப்படும். பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் தேசிய அளவிலான பங்கேற்பு **சான்றிதழ்** வழங்கப்படும். ஒவ்வொரு கலை வடிவங்களிலும் வழங்கப்படும் ரொக்க விருதுகள் பின்வருமாறு::

முதல் பரிசு = ரூ.25,000/-

இரண்டாம் பரிசு =ரூ.20,000/-

மூன்றாம் பரிசு =ரூ.15,000/-

**<u>தேசிய அளவிலான போட்டிகளுக்கு விண்ணப்பித்தல்:</u>**

தேசிய அளவிலான போட்டிகளில் விண்ணப்பித்தல் மூன்று கூறுகளைக் கொண்டது. அவைகளான: நுழைவு

1. பதிவு மேற்கொள்ளுதல்.
2. மாநில அளவிலான போட்டிகளின் காணொளி தொகுப்பு இணைத்தல்
3. 100 வார்த்தைகளுக்கு மிகாமல் உரைச்சுருக்கம் சமர்பித்தல்– தேர்ந்தெடுக்கப்பட்ட கலை வடிவம், அதன் பிறப்பிடம், நடைமுறையில் பயன்படுத்தும் சமூகங்கள், கலை வடிவம் நிகழ்த்தப்படும் சிறப்பு நிகழ்வுகள், உடைகள், அதனுடன் இணைந்த கருவிகள், சுற்றுச்சூழலுடனான அதன் தொடர்பு, அதன் பாணி, நுட்பங்கள் மற்றும்

பயன்படுத்தப்படும் பொருள்கள் பற்றிய விவரங்கள் உரைச் சுருக்கத்தில் அடங்கும்.

எனவே மாநில அளவிலான போட்டிகள் நடைப்பெறும் போது மேற்காண் விவரங்கள் பெறப்பட்டு மாநிலத் திட்ட இயக்ககத்திற்கு சமர்பிக்க வேண்டும்.

**நிதி ஒதுக்கீடு 2023-24**

பள்ளி மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகளை நேரடியாக நடத்தி மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மாநில அளவிலான போட்டிகள் நேரடியாக சேலம் மாவட்டத்தில் நடைபெற உள்ளது. இந்நிலையில் மாவட்ட அளவிலான போட்டிகளை நடத்திட ஏதுவாக (இணைப்பு-1-ன் படி) ஒரு மாவட்டத்திற்கு ரூ. 15,000 வீதம் நிதி விடுவிக்கப்படுகிறது. இந்நிதியைக் கொண்டு கொடுக்கப்பட்டுள்ள கலைப் பண்பாட்டுத் திருவிழா-2022-23 இன் வழிகாட்டுதல்கள்படி எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் சிறந்த நடுவர்களை தெரிவு செய்து போட்டிகளை நடத்தி மேற்குறிப்பிட்ட படி 28.09.2023க்குள் தேர்ந்தெடுக்கப்படும் மாணவ / மாணவியர் பெயர் பட்டியலை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து மாநில திட்ட இயக்கத்திற்கு வழங்கிட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டவுடனே அதற்காக விடுவிக்கப்பட்ட தொகைக்கான பயனீட்டுச் சான்றிதழை (UC) உரிய படிவத்தில் பூர்த்தி செய்து மாநிலத் திட்ட இயக்ககத்திற்கு அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் கடந்த ஆண்டுகளில் நடத்தப்பட்டது போல், இந்த ஆண்டும் இப்போட்டிகள் நடத்துவது குறித்த விரிவான வழிகாட்டுதல்களை மாவட்டங்களுக்கு வழங்கிட ஏதுவாக மாவட்ட அளவில் போட்டிகளை ஒருங்கிணைக்கம் பணியை மேற்கொள்ளும் உதவி மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் (APO) மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (DC) மற்றும் ஒரு ஆசிரியர் என மூன்று பேர் பங்குபெறும் வகையில் 28.08.2022 அன்று

www.Padasalai.Net

காலை 11.30 மணிக்கு இணைய வழியாக (Online) நடத்தப்படும் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தங்களது மாவட்டத்தை சார்ந்தவர்களும் கலந்து கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது. இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான இணையவழி இணைப்பு (link) பின்னர் தெரிவிக்கப்படும்.

இணைப்பு: 1. நிதி ஒதுக்கீடு விவரம் –2023–24

2. போட்டிகள் நடத்துவதற்கான பிற வழி முறைகள்

(Signed on 23.08.2023)

மாநிலத் திட்ட இயக்குநர்

www.Padasalai.Net

# இணைப்பு—I

## மாவட்ட வாரியாக விடுவிக்கப்படும் நிதி –2023–24

| S.No. | District | fund released 2023-24 (District level) |
|---|---|---|
| 1 | ARIYALUR | 15000 |
| 2 | CHENGALPATTU | 15000 |
| 3 | CHENNAI (EXT. GCC) | 15000 |
| 4 | COIMBATORE | 15000 |
| 5 | CUDDALORE | 15000 |
| 6 | DHARMAPURI | 15000 |
| 7 | DINDIGUL | 15000 |
| 8 | ERODE | 15000 |
| 9 | KALLAKURICHI | 15000 |
| 10 | KANCHEEPURAM | 15000 |
| 11 | KANNIYAKUMARI | 15000 |
| 12 | KARUR | 15000 |
| 13 | KRISHNAGIRI | 15000 |
| 14 | MADURAI | 15000 |
| 15 | MAYILADUTHURAI | 15000 |
| 16 | NAGAPATTINAM | 15000 |
| 17 | NAMAKKAL | 15000 |
| 18 | PERAMBALUR | 15000 |
| 19 | PUDUKKOTTAI | 15000 |
| 20 | RAMANATHAPURAM | 15000 |
| 21 | RANIPET | 15000 |
| 22 | SALEM | 15000 |
| 23 | SIVAGANGAI | 15000 |
| 24 | TENKASI | 15000 |
| 25 | THANJAVUR | 15000 |
| 26 | THE NILGIRIS | 15000 |
| 27 | THENI | 15000 |
| 28 | THOOTHUKKUDI | 15000 |
| 29 | TIRUCHIRAPPALLI | 15000 |
| 30 | TIRUNELVELI | 15000 |
| 31 | TIRUPATHUR | 15000 |
| 32 | TIRUPPUR | 15000 |
| 33 | TIRUVALLUR | 15000 |
| 34 | TIRUVANNAMALAI | 15000 |
| 35 | TIRUVARUR | 15000 |
| 36 | VELLORE | 15000 |
| 37 | VILLUPURAM | 15000 |
| 38 | VIRUDHUNAGAR | 15000 |
| | **Grand Total** | **570000** |

**(Rupees five lakh seventy thousand only)**

www.Padasalai.Net